www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

No. of Printed Pages : 7

+1

233617

8101

பதிவு எண் | J | U | L | 2 | 0 | 2 | 4 |

# மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிப்பில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** மற்றும் **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

**14x1=14**

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** ‘கவிதைக் கிரீடம்’ என்று போற்றப்படுவது :

(அ) திருச்சாழல்
(ஆ) குற்றாலக் குறவஞ்சி
(இ) குற்றாலக் கோவை
(ஈ) நன்னகர் வெண்பா

**2.** கூவும் குயிலும் கரையும் காகமும் - தொடரில் இடம்பெற்ற மரபு :

(அ) பெயர்மரபு
(ஆ) வினைமரபு
(இ) ஒலிமரபு
(ஈ) இவை மூன்றும்

**3.** ஒப்புரவு என்பதன் பொருள் :

(அ) அடக்கமுடையது
(ஆ) பண்புடையது
(இ) ஊருக்கு உதவுவது
(ஈ) செல்வமுடையது

[ திருப்புக

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. நிழல் போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை ?
(அ) வினை (ஆ) பயன் (இ) மெய் (ஈ) உரு

5. மண்ணுக்கு வளம் சேர்ப்பன :
(அ) மண்புழு (ஆ) ஊடுபயிர்
(இ) இயற்கை உரங்கள் (ஈ) இவை மூன்றும்

6. தமிழின் முதல் பாவடிவ நாடகநூல் :
(அ) இரகசிய வழி (ஆ) மனோன்மணீயம்
(இ) நூல்தொகை விளக்கம் (ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

7. **கூற்று** : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து புறம் சார்ந்த நூல்.
**காரணம்** : சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.
(அ) **கூற்று** சரி; **காரணம்** தவறு
(ஆ) இரண்டும் சரி
(இ) இரண்டிற்கும் தொடர்பில்லை
(ஈ) **கூற்று** தவறு; **காரணம்** சரி

8. சரியானதைத் தேர்ந்தெடுக்க.
(i) வரை - மலை (ii) வதுவை - திருமணம்
(iii) வாரணம் - யானை (iv) புடவி - கடல்
(அ) (ii), (iii), (iv) - சரி; (i) - தவறு
(ஆ) (i), (iii), (iv) - சரி; (ii) - தவறு
(இ) (i), (ii), (iv) - சரி; (iii) - தவறு
(ஈ) (i), (ii), (iii) - சரி; (iv) - தவறு

9. "வான் பொய்த்தது" - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள் :
(அ) வானம் இடிந்தது (ஆ) மழை பெய்யவில்லை
(இ) மின்னல் வெட்டியது (ஈ) வானம் என்பது பொய்யானது

10. பாயிரம் இல்லது ________ அன்றே.
(அ) காவியம் (ஆ) பனுவல் (இ) பாடல் (ஈ) கவிதை

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு :
    (அ) மொழிபெயர்ப்பாளர்
    (ஆ) இந்தியாவின் பெப்பிசு
    (இ) தலைமைத் துவிபாஷி
    (ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

12. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல் :
    (அ) நற்றிணை (ஆ) குறுந்தொகை
    (இ) அகநானூறு (ஈ) ஐங்குறுநூறு

13. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் :
    (அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
    (ஆ) பகுதி, இடைநிலை, சாரியை
    (இ) பகுதி, சந்தி, விகாரம்
    (ஈ) பகுதி, விகுதி

14. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
    (அ) காவலாளி (ஆ) மேலாளர் (இ) உதவியாள் (ஈ) ஆசிரியர்

## பகுதி - II
## பிரிவு - 1

**எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விடை தருக. 3x2=6

15. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது ?

16. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை ?

17. காவடிச் சிந்து என்பது யாது ?

18. ''ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்த நல்
    தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்''
    - இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது ? பழுத்தது எது ?

[ திருப்புக

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்கவும். 2x2=4

19. 'நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

20. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.

21. தமிழ்நாட்டின் மாநிலமரம் – சிறு குறிப்பு வரைக.

## பிரிவு - 3

**எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x2=14

22. ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை ?

23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
குரை, குறை

24. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
(அ) நிற்கின்றாய் (ஆ) அறிந்து

25. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
(அ) நீரோடை (ஆ) கற்பொடி

26. வல்லின மெய்களை இட்டும், நீக்கியும் எழுதுக.
(அ) அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.
(ஆ) திருக்குறள் உலக பொதுமறை என்றுப் போற்றப்படும் தமிழ் இலக்கியமாகும்.

27. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
(அ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.
(ஆ) காலத்துக்கேத்த மாறிப் புதுசு புதுசா மொழி வடிவத்த மாத்தணும்.

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



28. அடைப்புக்குள் உள்ள ஆக்கப் பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப் பெயர்களைக் கண்டறிக.
(அ) அறிவைத் தேடிப் போகுமிடம்; உலகம் அறிய உதவுமிடம் (அகம்) - ________.
(ஆ) வந்தால் மகிழ்ச்சி; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) - ________.

29. விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.
(அ) தனிமொழி - அறிவு; ________ - வண்ணமயில்;
பொதுமொழி - ________.
(ஆ) எழுத்து, சொல், ________, யாப்பு, ________.

30. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
(வளை, மை, ஆழி, இதழ்)
(அ) கண்ணிலும் எழுதலாம்; வெண்தாளிலும் எழுதலாம் ________.
(ஆ) எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும் ________.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை ?

32. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது ? ஏன் ?

33. "ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்"
- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை ?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

35. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.

[ திருப்புக

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



36. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.

38. தாமஸிகம் என்றால் என்ன ?

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் விடை தருக. **3x4=12**

39. (அ) வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. (அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) பொருண்மொழிக்காஞ்சித் துறையைச் சான்றுடன் விளக்குக.

41. இலக்கிய நயம் பாராட்டுக.

தண்டலை மயில்கள் ஆட,
தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க,
குவளைகண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட,
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட,
மருதம் வீற்றிருக்கும் மாதோ

- கம்பர்.

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



42. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் தருக.

43. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

(அ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

**அல்லது**

(ஆ) தன் கையே தனக்குதவி

## பகுதி – IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 3x6=18

44. (அ) கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.

**அல்லது**

(ஆ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

45. (அ) சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.

**அல்லது**

(ஆ) 'இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன' - கூற்றினை மெய்ப்பிக்க.

46. (அ) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது ?

**அல்லது**

(ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

## பகுதி – V

**அடிபிறழாமல்** எழுதுக. 4+2=6

47. (அ) "அம்ம வாழி ....." எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல்.

(ஆ) 'கொளல்' என முடியும் குறள்.

- o 0 o -

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com